Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 7 இதழ் 142

National Tamil Daily தேசிய தினசரி

(3-7-65)

விசுவாவசு ஆனி 19 ஈழி அவ் பிறை 3 சனிக்கிழமை




## வாழ்க்கைச் செலவுப்பிரச்னை

பம்பலப்பிட்டி, வெள்ளி

வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் நாட்டில் அதிகரித்துள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைக்கவும் வழியென்ன? மந்திரிசபை உபகமிட்டியும் மற்றும் பல குழுக்களும் நிபுணர்களும் ஆலோசனை கூறியுள்ளனர் ஆராய்ந்தும் வருகின்றனர். இம்மாதம் 6-ம் திகதி அரசாங்க பார்லிமென்டரிக் குழு மீண்டும் கூடும்பொழுது எம். பிக்கள் பலர் தங்கள் ஆலோசனைகளைத் தெரிவிப்பர். தமிழரசுக்கட்சியும் சில யோசனைகளைத் தெரிவிக்கவிருக்கிறது. இந்த யோசனை பற்றி இரு தினங்களுக்கு முன் கொழும்பில் கூடிய தமிழரசுக்கட்சியின் பார்லிமென்டரிக்குழுவின் அவசரக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

# சிங்கள தேர்ச்சி நிபந்தனை நீங்கும்?

## புதிய அரசாங்க ஊழியர் உத்தியோகம் உறுதியாகும்

யாழ்ப்பாணம், சனி

'சிங்களத் தேர்ச்சி' நிபந்தனையை நிறைவேற்றத் தவறி, உத்தியோகம் உறுதிப்படுத்தப்படாமலும், உத்தியோக உயர்வு இல்லாமலும் இருக்கும் 1956-ம் வருடத்துக்குப் பின் அரசாங்க சேவையில் சேர்ந்த ஊழியர்களுக்கு விரைவில் நிவாரணம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த ஊழியர்களும் இனி அரசாங்க சேவையில் சேரும் ஊழியர்களும் சிங்களத் தகுதிப் பரீட்சையில் சித்தியடையவேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்படமாட்டார்களென அறியப்படுகின்றது.

யாழ்ப்பாணம், சனி

1956-ம் ஆண்டுக்குப் பின் அரசாங்க சேவையில் சேர்ந்த சிங்களம் தெரியாத ஊழியர்

(6-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தை வீழ்த்த இடதுசாரிகள் சதி!

### திட்டமிட்டு செயல்படுவதாக இரகசிய பொலிஸ் தகவல்

கொழும்பு, வெள்ளி

அரசாங்கத்துக்கு நீங்கிழைக்கும் நோக்கத்துடன் அரசாங்க இலாகாக்கள் ஒவ்வொன்றிலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்தும், அது எவ்விதம் இயங்கிவருகிறது என்பது குறித்தும் இடதுசாரியினர் தங்கள் ஆதரவாளர்கள் மூலம் கண்காணிப்புடன் நிலைமையை கவனித்து வருவதாக இரகசியப் பொலிசார் பிரதமரிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

அரசாங்க சேவையில் வேண்டுமென்றே சதி செய்யும் நோக்கத்துடன் இடதுசாரிகள் முறையாக திட்டமிட்டு தீவிரமாக செயல்பட்டு வருவதாகவும் இரகசியப் பொலிசார் தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இரகசியப் பொலிசாரின் அறிக்கை குறித்து நேற்று அரசாங்கம் ஆலோசனை செய்தது.

ராணுவ உத்தியோகஸ்தர்களிடையேயும் கோஷ்டி மனப்பான்மை வளர்ந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல், இன மத வேறுபாடுகளைக் கொண்டு உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு பிரிவாக பிளவுபட்டுள்ளனர் என்பதையும் அந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. அடிக்கடி தங்களுக்குள் சந்தித்து பேச்சுக்கள் நடத்திவரும் நான்கு உயர்தர ராணுவ அதிகாரிகள் பற்றியும் இரகசிய பொலிசார் தமது அறிக்கையில் குறிப்பிட்டுக் கூறியுள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் திராட்சை செய்கை விருத்திக்கு முயற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்டத்தில் திராட்சை செய்கையை அபிவிருத்திசெய்வதற்கு யாழ்ப்பாணம் கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு. என். டி. ஜெயவீரா தலைமையில் ஒரு மகாநாடு நடைபெற்றது. இம்மகாநாட்டில் பேராதனையிலும் மகாஇலுப்பள்ளமாவிலும் கடமையாற்றும் பூங்கனியியல் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அரசாங்க அதிபர் மகாநாட்டின் நோக்கத்தைப் பற்றி கூறியதாவது:-

சில ஆண்டுகளாக மக்கள் திராட்சை செய்கையில் ஊக்கஞ்செலுத்திவருவதைக் கண்ணுற்ற மாவட்ட விவசாயக் குழுவினர் இப்பயிர்ச் செய்கையில் அக்கறையுள்ள அனைவரையும் ஒன்று சேர்த்து அவர்களை நோக்கும் பிரச்னைகளை அலசி ஆராய்ந்து பொது வழித்துறைகளை வகுக்க வேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்தின் பொருளாதாரத்திற்கு மதிப்புக்குரிய அளவில் நன்மை பயக்கக்கூடிய இப்பயிர்ச் செய்கையில் விருப்புடைய அனைவரையும் உறுப்பினராகக் கொண்டு நடைபெறத்தக்க தொருகைங்கரியத்தை அமைப்பதில் பயன்கிடைக்கும்.

1966-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 800 திராட்சைக் கொடி நடுகைத்துண்டுகளைப் பொதுமக்களுக்கு மகா இலுப்பள்ளம் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வழங்கப்படலாமென அந்நிலையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் கூறினார்.

## தேசிய சுவீப் முடிவுகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

நேற்று முன்தினம் இழுக்கப்பெற்ற தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாம் பரிசு

02 P 0368 — ரூ. 80,000

இரண்டாம் பரிசு

07 Y 0157 — ரூ 13,000

மூன்றும் பரிசு

11 Q 0884 — ரூ. 8,000

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்று இங்கு வரும் கருதிநல்

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

மகாவந் கருதிநல் தோமஸ் கூரே இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடைவார். மாலை 5-30 மணிக்கு யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் மாநகரசபை முதல்வராலும், அங்கத்தவர்களாலும் பொதுமக்கள் சார்பில் வரவேற்பளிக்கப்படும்.

நாளை காலை 7-30 மணிக்கு ஆசனக்கோவிலில் திவ்யபூசை நிறைவேற்றும் வைபவத்தில் கலந்துகொள்வார். மாலை 6-30 மணிக்கு சம்பத்தரிசியார் கல்லூரி மைதானத்தில் பாப்பரசர் தினக் கொண்டாட்டத்திற்குத் தலைமைதாங்குவார், அதன்பின் மேற்றிராசனத்தின் பொதுவரவேற்பு நடைபெறும் இதைத் தொடர்ந்து சற்பிரசாத ஆசீர்வாதம் நடைபெறும்.

5ந் தேதி திங்கட்கிழமை காலை 6-30 மணிக்கு யாழ்ப்பாண மேற்றிராசனக் குருமார் சந்நியாசிகள், கன்னியாஸ்திரிமார், ஆசிரியர்களுக்காக ஆசனக் கோவிலில் திவ்யபூசை.

## உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம்

கொழும்பு, வெள்ளி

இலங்கை வானொலியைச் சேர்ந்த குமாஸ்தாக்கள், சாதாரண உத்தியோகஸ்தர்கள் பன்னிருவர் வேறு இலாகாக்களுக்கு நேற்று முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். எதிர்க்கட்சியின் பத்திரிகைகளை இலங்கை வானொலி வட்டாரத்தில் விநியோகிப்பதற்கு ஏஜெண்டுகளாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நடைபெற்ற விசாரணையின் முடிவாகவே இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டார்களெனத் தெரியவருகிறது.

## கட்டுப்பாட்டு விலைக்கு டயர், டியுப்

கொழும்பு, வெள்ளி

சைக்கிள் 'டயர்' 'டியூப்'புகள் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டுப்பாட்டு விலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன, உள்நாட்டில் உற்பத்தியாகும் 'டயர்' 'டியூப்'புக்கள் கட்டுப்பாட்டு விலைக்கே விற்கப்படவேண்டும் என அரசாங்கம் விசேஷ வர்த்தமானி மூலம் தெரிவித்துள்ளது.

இப்பொருட்களை வாங்கும் போது விற்பனையாளர்களிடமிருந்து ரசீது கோர பாவனையாளர்களுக்கு உரிமை உண்டெனவும் அந்த விசேஷ வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரசீதில் எந்த திகதியில் என்ன விலைக்கு, எவ்வளவு தொகையில் விற்கப்பட்டது என்பது தெரிவிக்கப்படவேண்டும். வெளிநாடுகளிலிருந்து சைக்கிள் 'டயர்' 'டியூப்' ஆகியவை இப்போது இறக்குமதி செய்யப்படுவதில்லை.

ஒரு டயரின் கட்டுப்பாட்டு (மொத்த விற்பனவு) விலை 5 ரூபா 57 சதமாகும். ஒரு டயரின் கட்டுப்பாட்டு சில்லறை விற்பனவு விலை 6 ரூபாவாகும்.

## சண்: கோஷ்டியை சீன அங்கீகரித்தது

கொழும்பு, வெள்ளி

சண்முகதாசன் பிரிவைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சியே இலங்கையில் ஒரேயொரு கம்யூனிஸ்ட் கட்சியென்று சீன கம்யூனிஸ்ட்கட்சி அங்கீகரித்துள்ளது. அண்மையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. என். சண்முகதாசனும், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அதன் பொதுக் காரியதரிசி இஸ்னியோ பிங்கும் ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

"இரண்டு கட்சிகளிடையேயும் பரஸ்பர நல்லெண்ணத்தை வளர்ப்பதையே இருபகுதியினரும் கருத்தாகக் கொண்டுள்ளனரென்றும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்து புரட்சியின் மூலம் புதிய சமூகத்தை உருவாக்கவேண்டுமென்றும், இலங்கை மக்களுக்கும், சீனமக்களுக்குமிடையேயுள்ள உறவை அபிவிருத்தி செய்வதென்றும் அவ்வுடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அபிஷேகமும் உபந்நியாசமும்

யாழ்ப்பாணம், சனி

இன்று சனிக்கிழமை வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் காலை 7 மணி வரை மாணிக்கவாசகர் விசேஷ அபிசேகமும் மாலை 6 மணி முதல் 7 மணிவரை ஸ்ரீமத் வி. என். எஸ். மணிபாகவதர் கதாப்பிரசங்கமும் இரவு 7 மணியளவில் உற்சவமும் நிகழவேறும்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்,
வல்வெட்டித்துறை

### மணிவாக்கு

நமது வாழ்க்கையின் நோக்கம் எல்லாருக்கும் தொண்டுசெய்வது தான். எல்லார் உள்ளத்திலும் தெய்வம் கோவில் கொண்டிருக்கின்றது என்ற உணர்ச்சி இருந்தாலே இந்தத் தொண்டைத் தொடர்ந்து செய்யமுடியும்.

—சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Pox 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆனி மீ 19 உ (3-7-65)


## டாக்டர் ராதாகிருஷ்ணனின் அறிவுரை

சென்னையிலே இந்துஸ்தான் வர்த்தக சபையின் புதிய கட்டிடத்தை ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் திறந்து வைக்கையில் வர்த்தகர்களுக்கும் அரசாங்கத்துக்கும் நல்லதோர் அறிவுரை நிகழ்த்தினார். நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அரசாங்கமும் தனியார் கைத்தொழில், வர்த்தக ஸ்தாபனங்களும் ஒத்துழைப்பது மகிழ்ச்சிக்குரியதென்றும் ஆனால் எந்த முறைகளிலாவது லாபமடையவேண்டுமென்றில்லாது தர்ம நியாயமான வழிகளையே பின்பற்ற வேண்டுமென்றும், பொதுமக்களின் உணவு, உடை, குடியிருப்பு முதலிய அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்கள் அதிக திருப்தியாக வாழ்வதில் தான் உண்மையில் பொருளாதார முன்னேற்றம் அடங்கியிருக்குமென்றும் சரியாகச் சொன்னார். அவர் கூறியது நம் இலங்கைக்கும் அப்படியே பொருந்தும்.

ஒரு விஷயத்தில் இந்தியாவைவிட நம் இலங்கை அதிர்ஷ்டம் செய்ததென்றே கூறவேண்டும். இந்தியாவிலே வருமானத்தில் பெரும்பகுதி இராணுவ பாதுகாப்புக்காக செலவழிக்கப்படுகின்றது. ஆனால் இலங்கையிலோ மொத்தவருமானத்தில் நான்கு சதவிகிதமும் பாதுகாப்புச் செலவுக்கு ஆகவில்லை. அதனால் குறைந்த விலைக்கு பங்கீட்டரிசி விற்பது இலவசக் கல்வி அளிப்பது முதலிய பல சமூகசேவைகளுக்கும் இங்கு தாராளமாகச் செலவிடக்கூடியதாகவுள்ளது. என்றாலும் உணவு, உடை முதலிய அத்தியாவசியதேவைகளுக்கு நாம் வெளிநாடுகளையே அதிகம் நம்பி வாழவேண்டியிருப்பதால் நமது நாட்டுச் செல்வம் அதிகமாக வெளியேறவும் வெளிநாட்டுச்செலாவணி அதிகம் தேவையாகவுமுள்ளது. இந்தியாவிலோ உள்நாட்டுத்தேவைகள், உற்பத்திப்பெருக்கத்தின் மூலம் வெகுவாய் பூர்த்தி செய்யப்படுகின்றன.

நமது செல்வத்தைக் கூடுமானவரை பாதுகாக்க உணவு உடை முதலிய மக்களின் அத்தியாவசிய தேவைகளை உற்பத்திசெய்வதில் அரசாங்கம் மட்டுமின்றி தனிப்பட்டவர்களும் பூரணமாக ஒத்துழைக்க வேண்டிய அவசியம் இங்கு அதிகமாகும். குடியிருக்க வீடுகள் கட்டிக்கொள்ளவும் பொதுமக்களுக்கு அதிக வாய்ப்புகள் அளிக்கவேண்டும். தனிப்பட்டவர்களுக்கு இந்தத்தேசிய கைங்கரியத்தில் கூடுமானவரை வசதிகள் அளித்தால் தான், அவர்கள் விசேஷ அக்கறையுடன் இதில் ஈடுபடவும் அவர்களது உற்சாகமான ஒத்துழைப்புக் கிடைக்கவும் முடியும்.

தனிப்பட்டவர்களிடையே கைத்தொழில், வர்த்தகத் திறமை வாய்ந்தவர்கள் பலர் உண்டு. அவர்களின் பூரண ஒத்துழைப்பையும், மக்களின் நன்மைக்கான முறையில் பெறக்கூடியவிதத்தில் காரியங்கள் செய்வதில்தான் நாடு முன்னேறமுடியும். எல்லாவற்றையும் "தேசியமயம்" ஆக்கிவிடவேண்டுமென்று கூறி சம்பளத்துக்காக வேலைபார்க்கும் அதிகாரவர்க்கத்திடம் இவையனைத்தையும் ஒப்படைப்பதாயின் தொழில்களில் நஷ்டம் ஏற்படுவதுடன் பொதுமக்களுக்கும் எவ்வித நன்மையும் ஏற்படாததில் வியப்பில்லை. ஆகவே இவ்விஷயத்தைப் பற்றிப் புதிய அரசாங்கம் அடியோடு புனராலோசனைசெய்து பொதுமக்களின் மேலான நன்மைக்கான முறையில் தனது வர்த்தகக் கைத்தொழில் கொள்கையை வகுக்கவேண்டும்.

'லைசென்ஸ்', 'கோட்டா' முதலியவற்றை அளிக்கும் அதிகாரத்தைப் புதிய 'போர்ட்'டிடம் ஒப்படைக்க இந்திய அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது. மந்திரிகளிடம் இந்த அதிகாரமிருப்பது பல அரசியல் துஷ்பிரயோகங்களுக்கும், விருப்பு வெறுப்புகளுக்கும் இடமளிப்பதாகப் புகார்கள் கிளம்பியிருப்பதாயும் தனி 'போர்ட்'டிடம் இந்த அதிகாரத்தை ஒப்புவிப்பதால் இப்புகார் அதிகமிராதென்றும் தெரிவித்தார் டாக்டர் ராதாகிருஷ்ணன். இலங்கையிலும் அவ்விதமேசெய்வது வீண்புகார்களுக்கும், லஞ்சஊழல்களுக்கும் வெகுவாக இடமில்லாமல் செய்வதாகும். புதிய வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் மிகச் சங்கடமான பொறுப்புள்ள பிரதமர், நாட்டிலுள்ள எல்லாத் திறமைகளையும், சக்திகளையும் பொதுமக்களின் நலனுக்காகப் பூரணமாய்ப் பயன்படுத்தும்வகையில் புதிய திட்டம் தயாரிப்பாரென்றே நம்புவோம்.

# இலங்கையின் முதற் கர்தினல் தோமஸ் கூரே ஆண்டகை

**மகாவந். கருதினல் கூரே ஆண்டவர் இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் வருகிறார். அவரது வாழ்க்கைச் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.**

கத்தோலிக்க வேதம் செழித்து விளங்கும் மாகிய பெரியமுல்லை என்ற கிராமம் ஒன்றுண்டு. இக்கிராம மக்கள் வறியவர்களாக இருந்தபோதிலும் சமயப்பற்றிலும் வேதவழிபாட்டிலும் ஈடுபாடு கொண்டவர்கள். பெரியமுல்லை என்ற கிராமத்தில் ஜயவாத் ஆராச்சிகே ஜேக்கப்கூரே என்பவருக்கும் அவர் மனைவி ஜயசிங்க ஆராச்சிகே மார்கிரீது என்பவருக்கும் பிள்ளையாகப் பிறந்தவர்தான் இன்றைய கொழும்பு அதிமேற்றிராணியாவார். இக்குடும்பத்தினர் சிறந்த குடும்ப வாழ்வு நடாத்தி பிறர்க்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர். அதிமேற்றிராணியாருக்கு மூன்று சகோதரர்களும் இரு சகோதரிகளும் இருந்தனர் ஆனால் இரு சகோதரர்களையும் பாலிய வயதிலேயே தேவன் தம்முடன் சேர்த்துக் கொண்டார்.

இதன் காரணமாக மனமுடைந்த பெற்றோர் தமது கடைசிப் பிள்ளையான பெஞ்சமினைத் தேவனிடம் ஒப்படைத்தனர். தற்பொழுது இக்குடும்பத்தில் சீராயிருப்பவர் இந்த பெஞ்சமின்தான். இவர்தான் கொழும்பு அதிமேற்றிராணியாரும் இலங்கையின் முதற்கருதினலுமான மகாவணக்குரிய தோமஸ் கருதினல்கூரே ஆண்டவர். இவருக்கு 64 வயதாகிறது. தனது அயல் கிராமமான டலுகொத்தவிலுள்ள கத்தோலிக்கபாடசாலையில் கல்வி பயின்றபின்னர் கொழும்பில் அர்ச் ஞானப்பிரகாசியார் குருமண்டபத்தில் அனுமதிக்கப்பட்டு சஞ்சூசையப்பர் கல்லூரியில் ஆங்கிலக் கல்வியை ஆரம்பித்தார் அதன் பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்று பி. ஏ பட்டம் பெற்றார்.

1926-ம் ஆண்டு பிரதர் கூரே ரோமாபுரிக்கு உயர்தரக்கல்விக்காக அனுப்பப்பட்டு வேதசாஸ்திரவகையில் இரண்டு கலாநிதிப்பட்டங்களும் பெற்றார், 1931-ம்ஆண்டு அபிஷேகம் பெற்று தாயகம் திரும்பினார். 1945-ம் ஆண்டு

(6-ம் பக்கம்பார்க்க)

# திருக்கேதீச்சரத் திருப்பணி திரும்பவும் ஆரம்பம்

— சேர் கந்தையா வைத்தியநாதன் —

**இலங்கை இந்திய போக்குவரத்து கஷ்டங்கள் காரணமாகவும் உள்ளூரில் ஏற்பட்டகஷ்டங்கள் காரணமாகவும் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் புனரமைப்பு வேலைகள் கடந்த நான்கு ஆண்டுகள் திருப்திகரமான முறையில் நடைபெறவில்லை. இதன் காரணமாக திருப்பணிச் சபையார் ஆலயத்தை சுற்றியுள்ள திருத்த வேலைகளில் கவனம் செலுத்தினர்.**

ஜூன் மாதம் 28-ம் திகதி இந்தியாவிலிருந்து ஸ்ரீ செல்லக்கண்ணு ஸ்தபதியாரின் தலைமையில் வந்த 14 சிற்பிகள் ஆலய திருப்பணிச்சபையின் வேலை முறையில் ஓர் சகாப்தத்தை உண்டுபண்ணியுள்ளனர். ஸ்ரீ செல்லக்கண்ணு ஸ்தபதியாரும் அவரின் சகோதரருமான ஸ்ரீ வைத்திய நாதஸ்தபதியார் ஆலய ஆக்கவேலைகள்பற்றிக் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னர் காலஞ்சென்ற ஈசான சிவாச்சாரிய சுவாமிகளின் ஆலோசனையுடன் திட்டம் தயாரித்திருந்தனர். பண்டிட் நேருவிடமிருந்து இந்து சார்புடைய சிற்ப வேலைகளை செய்வதிலும் மற்றும் சிறந்த ஆக்கவேலைகள் செய்வதிலும் ஸ்ரீ செல்லக்கண்ணு ஸ்தபதியார் சிறந்த பாராட்டுதல்களைப் பெற்றிருக்கிறார். சில காலங்களுக்குமுன்னர் இந்த ஸ்ரீ வைத்தியநாதஸ்பதி சென்னை அரசாங்கத்தினால் மகாபலிபுரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சிற்பக்கலூரியின் அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

பரிவாரமூர்த்திகளின் கட்டடங்களும் ஆலயத்தை சுற்றியுள்ள உள் மதில்களும் கோபுர வேலைகளும், உள் ஆலய வீதிகளுமே தற்பொழுது திருப்பணிச்சபையினரால் செய்யப்பட்டுள்ளன. தற்பொழுது வந்திருக்கும் திறமையுடைய சிற்பாச்சாரிகள் கருங்கல்லில் வேலைசெய்து அனு

(6-ம் பக்கம் பார்க்க)

நாளை அமெரிக்க சுதந்திரதினம்

# ஐக்கியத்துக்கு எடுத்துக்காட்டு அமெரிக்க அரசியல் சாசனம்

**மிகவும் சிறப்பாக நாளை கொண்டாடப்படும் அமெரிக்க தேசிய தினத்துக்கு வழிகோலியவர்கள் ஒருவர் இருவரல்ல. எத்தனையோ அரசியல் வாதிகள், சட்டநிபுணர்கள் பேரறிஞர்கள், கல்விமான்கள், இளைஞர்கள், முதியவர்கள் இப்படி எல்லோருமே சேர்ந்து சலியாது ஓயாது உழைத்த உழைப்பின் பலனாகவே 1776-ம் வருடம் ஜூலை மாதம் 4-ம் திகதி பிலடெல்பியாவின் சுதந்திர பிரகடனம் செய்யப்பட்டது.**

அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்ட சில நாட்களில் இந்த சுதந்திரப் பிரகடனத்தைத் தயாரித்த கமிட்டியின் அங்கத்தவரும் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவி வகித்தவருமான திரு. ஜோன் ஆதம் மனைவிக்கு அனுப்பிய கடிதமொன்றில் 'இந்த சுதந்திரப் பிரகடனம் பிற்காலங்களில் வரும் சந்ததியினரால் பெரிய கொண்டாட்டமாக வருடந்தோறும் கொண்டாடப்படும் என நான் நம்புகின்றேன். இந்த தினம் தெய்வ பக்தியுடன் கொண்டாடப்பட வேண்டிய தினம், இத்தினத்தை ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த சகல ராஜ்யங்களும் சிறந்தமுறையில் எப்போதிருந்து எப்போதும் கொண்டாடவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஜோன் ஆதமின் கருத்தும் கனவுகளும் இப்போது கனவாகி பலிதமாகியுள்ளன. ஜனாதிபதியின் சுதந்திரதினச் செய்தியுடன் அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் சுதந்திரதின நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. முந்திய ஜனாதிபதி திரு. ஐசனோவர் ஒருமுறை வெளியிட்ட செய்தியில் மனித உரிமை சர்வதேசத்தில் நிலைபெற நாம் உழைக்க முன்னிற்போம் எனத் தெரிவித்திருந்தார்.

**அரசியலமைப்பு சட்டம் உருவாக்கியவர்கள்**

அமெரிக்க சுதந்திரதினத்தின்போது அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க காரணமாக இருந்தவர்கள் பற்றியும் சிறிது ஞாபகப்படுத்துவது பொருத்தமாகவிருக்கும்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

இருபாலை சைவபரிபாலன சங்க நிர்வாகச் செயலாளர் மிக மனம் வருந்தி எழுதுவதாவது:-

ஆறுமுக நாவலர் பெருமானையே அறிஞராக்கிய உயர் திரு சேனாதிராசா முதலியார் அவதரித்த எமது கிராமமாகிய இருபாலையிலே இளைஞர்களாகிய நாங்கள் சங்கம் அமைத்து எமது சமயத்துக்கும் மொழிக்கும் தொண்டாற்ற முன்வந்தோம். கொழும்புவாழ் இருபாலை மக்களிடையே கொழும்புக் கிளை அமைத்து பணி செய்துவருகின்றோம். ஆனால் பலன் ஏதுவுமில்லையே என்றுதான் மனம் வருந்த வேண்டியுள்ளது.

குருபூசைக்குரிய உபயகாரரை நாமே ஒழுங்கு செய்து பணம், நோட்டீஸ், பேச்சாளர் எல்லோரையும் ஒழுங்குசெய்து ஏற்ற அறிவித்தல் கொடுத்து விழாவை நடத்தினாலும், கூட்டத்துக்கு வருபவர்கள் கைவிரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில தாய்மார்களும் குழந்தைகளும்தான்.

ஆனால் இதே வேளையில் இந்நிகழ்ச்சியோடு "சின்னமேளம்-மல்லிகா செற்" என்று ஒரு சொல்லைச் சேர்த்து ஒரு நோட்டீஸ் அச்சடித்தால்—அன்றைய கூட்டத்தைக் கண்காணிப்பதற்கு பொலிசாரது உதவியை நாடத்தான் வேண்டியிருக்கும். குழந்தை குஞ்சிலிருந்து கிழடுகட்டையெல்லாம் பசி, பிணி, தாகம் எல்லாவற்றையும் மறந்து, மெய்மறந்து நேரத்தையும் பொருட்படுத்தாது சின்னமேள நிகழ்ச்சியை ரசிக்கிறார்கள்.

இதை காலத்தின் கோலம் என்பதா? என்ன சொல்லுவது? உண்மையான தெய்வ வழிபாட்டுக்கு மதிப்புக் கொடுக்காமல் உழலும் எம் மக்களுக்கு என்றுதான் விடிவு ஏற்படுமோ?" என்று மனம் புழுங்கி எழுதுகின்றார்.

இக்கடிதத்துடன் இன்று நடைபெறும் மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை துண்டுப் பிரசுரமும் இருந்தது. இதேபோல் இன்னும் பல பல சமய ஸ்தாபன நிர்வாகிகளும் கவலைப்படுகிறார்கள். இது பகிரங்க ரகசியம்.

* * *

பொதுமக்கள்மீது குறை சொல்லிப் பயனில்லை. அவர்கள் மனதைத் திருப்பி, இவ்வித விழாக்களுக்கு வருமாறு எப்படிச் செய்வது என்பதைப் பற்றி சிந்தித்து, அதற்கு ஆவன செய்யவேண்டும்.

கலை நிகழ்ச்சிகளென்றால் செவிகளுக்கு மட்டுமன்றி கண்ணுக்கும் இனிய விருந்து கிடைக்கலாம். அதனாலேயே மக்கள் கலை நிகழ்ச்சிகளை அதிகம் விரும்புகிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் குழந்தைகளுக்குத்தக்க கலைப்பயிற்சி அளித்து, சமய நிகழ்ச்சிகளில் குழந்தைகளின் புனிதமான கலை நிகழ்ச்சிகளையும் சேர்ப்பதாயின் கூட்டத்துக்குக் குறைவிராது.

உதாரணமாக ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் பாடிய திருவாசகத்திலே பல பாடல்களுக்கு, குழந்தைகள் அபிநயம் பிடித்து நடனமாடலாம். கீழ்த்தர உணர்ச்சியைத்தூண்டும் பாடல்களை விட்டு, தெய்வ சிந்தனையை வளர்க்கக்கூடிய விதத்தில் புனிதமான நடனங்களுக்கு ஒழுங்கு செய்வதாயின் அது பெரிதும் வரவேற்கத்தக்கதாகும்.

ஸ்ரீ மணிவாசகரின் வாழ்க்கையைப்பற்றிய நாடகம், சினிமா காட்சி முதலியவற்றைக் காட்டலாம். காலத்துக்குத் தக்கபடி, மக்களின் மனதைக் கவரக் கூடிய விதத்தில் நிகழ்ச்சிகளுக்கு ஒழுங்கு செய்தால், கூட்டத்துக்குக் குறைவிருக்குமா? கஷ்டம்தான். ஆனால் கஷ்டப்பட்டால் தானே வெற்றியும் பலனுமுண்டு.

(5-ம் பக்கம் பார்க்க)

# "குண்டு வீச்சை நிறுத்தவேண்டும் வெளியேறவும் வேண்டும்"

## வியட்நாம் பிரச்னை தீர இதுதான் வழி என்கிறது ஹானோய்

### சமாதானக் குழு வரவேற்கப்பட மாட்டாது என ஊர்ஜிதம்

ஹானோய், ஜூலை 2

காமன்வெல்த் சமாதானக் குழுவுக்கு வட வியட்நாம் அனுமதி மறுத்திருக்கிறது என்பதை ஹானோய் வானொலி நேற்று ஊர்ஜிதம் செய்தது.

வியட்நாம் விஷயத்தில் பிரிட்டன் அமெரிக்காவுக்கு ஆதரவளிப்பது ஜெனிவா கூட்டுத் தலைமை நாடு என்ற அதன் அந்தஸ்தை துஷ்பிரயோகம் செய்வதாகுமென்றும் ஹானோய் வானொலி கூறியது.

தென் வியட்நாமிலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் வெளியேறுவதும் வடவியட்நாம்மீது குண்டுவீச்சை நிறுத்துவதுமே வியட்நாம் பிரச்னையைத் தீர்ப்பதற்கான வழி என்றும் அது மேலும் கூறியது.

சீனப் பத்திரிகையான "பீபிள்ஸ் டெய்லி" எழுதியுள்ள ஒரு தலையங்கத்தில் காமன்வெல்த் சமாதானக்குழு அமெரிக்காவுக்குத்தான் ஆதரவளிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில் தென்வியட்நாம் கடற்கரையொன்றில் வியட்காங்கியருடன் போராடிக் கொண்டிருக்கும் அரசாங்கத் துருப்புகளுக்கு உதவி பணிக்கும் பொருட்டு 500 அமெரிக்க மாலுமித் துருப்புகள் நேற்று இறக்கப்பட்டன. துன்வேஹாய் என்ற நகரை வியட்காங்குகள் நேற்றுப் பலமாகத் தாக்க ஆரம்பித்ததாய் அறிவிக்கப்படுகிறது.

## சட்டோவின் ஆபிரிக்க ஸ்தாபனம்

பெர்லின், ஜூலை 2

"மத்தியதரைக் கடலிலிருந்து கன்னம்பிக்கை முனை வரை ஓர் ஏகாதிபத்திய இராணுவக் கூட்டு ஒன்றை நிறுவுவது "நேட்டோ" ஸ்தாபனத்தின் ஓர் இரகசியத் திட்டமாகும்" என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் பிரபல பத்திரிகையான "நூய் டூய்ட்ஸ்லாண்ட்" என்னும் பத்திரிகை எழுதியுள்ளது. இந்த இராணுவக் கூட்டுக்கு தென் அத்லாந்திக் ஒப்பந்த ஸ்தாபனம் (செட்டோ) எனப் பெயரிடப்படுமென இப்பத்திரிகை கூறுகிறது. இது சீட்டோ'வின் ஆபிரிக்க ஸ்தாபனமாக விளங்குமாம்.

## இந்திய அறிஞர்கள் விஜயம்

பெர்லின், ஜூலை 2

இந்திய பிராணி - தாவர சங்கத்தின் தலைவர் டாக்டர் சாவித்திரி ஷானி இப்போது பெர்லின் ஹம்போல்ட் பல்கலைக் கழகத்தில் தங்கியிருக்கிறார்.

கர்னாடகப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் திரு டி. ஜி. பவேட், அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தின் சரித்திரப் பேராசிரியர் நூருல் அசன், இந்திய பல்கலைக் கழகக் கமிஷனின் காரியதரிசி பேராசிரியர் கே எல். ஜோஷி ஆகியோரும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு விஜயம் செய்தனர். இரு நாடுகளும் பல்கலைக் கழக ஆசிரியர்களைப் பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டுமென்று திரு. பவேட யோசனை கூறினர்.

## பெல்கிரேடில் உலக இலக்கிய மேதைகள் சந்திப்பு

பெல்கிரேட், ஜூலை 2

"தற்போதைய உலகில் இலக்கியத்தின் இடம்" குறித்து விவாதிப்பதற்காக இங்கு அல்பைன் ஏரிக்கரையில் நடைபெறும் உலக எழுத்தாளர் மகாநாட்டில் ஆர்தர் மில்லர், இலியா எஹ்ரான்பர்க், இயூஜின் அயோனெஸ்கோ, ஸ்டீபன் ஸ்பெண்டர் ஆகிய மாபெரும் இலக்கிய கர்த்தாக்கள் உட்பட 600 எழுத்தாளர்கள் கலந்துகொள்கிறார்கள்.

இந்த சர்வதேச எழுத்தாளர் மகாநாட்டிற்கு 40 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருக்கின்றனர். அலெக்ஸிசுரிகோவ், அலெக்ஸாண்டர் ட்வார்டோவ்ஸ்கி, லியோனிட் லியனோவ் போன்ற எழுத்துலக மேதைகளுட்பட 8 பேரடங்கிய சோவியத் தூதுகோஷ்டி பார்வையாளராகக் கலந்துகொள்கிறது.

இன்றைய உலகில் இலக்கியத்தின் முக்கியத்துவம், எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்குமிடையேயான தொடர்பு, மக்களின் கலைக்கும் ரசனையும், இலக்கியத்தில் புதிய இயக்கங்கள் போன்ற விஷயங்கள் மகாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருக்கின்றன. இன்று நடைபெறும் புதிய தலைவர் தெரிவில் அமெரிக்காவைச் சேர்ந்த ஆர்தர் மில்லர் அல்லது குவாட்டமாலாவைச் சேர்ந்த டிக்வேல் அஸ்டூரியாஸ் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி டிட்டோவின் ஆதரவில் கூட்டம் நடைபெறுகிறது.

## ராஜாஜிக்கு எதிரான மனு தள்ளுபடி செய்யப்பட்டது

மதுரை, ஜூலை 2

ராஜாஜி, ஸ்ரீ டி. சதாசிவம் ஆகியோர்மீது நீதிமன்றத்தை அவமதித்ததாக வழக்குத் தொடர வேண்டும் எனக் கோரி எம். வீரையா தாக்கல் செய்திருந்த மனுவை மதுரை ஜில்லா நீதிபதி திரு. சந்திரசேகரமேனன் தள்ளுபடி செய்தார்.

இதேமாதிரி ஜூன் 2-ம் திகதி அவர் தாக்கல் செய்திருந்த மனுவை அடிஷனல் முதல்வகுப்பு மாஜிஸ்டிரேட்டும் ஏற்கனவே தள்ளுபடி செய்திருந்தார். மானவர் தாக்குதல் வழக்கில்தான் ஒரு எதிரி என்றும் இக்க விஷயம் கோர்ட் விசாரணையிருக்கையில் இதுபற்றி ராஜாஜி எழுதியிருந்த கட்டுரையை சுயராஜ்ய பத்திரிகை பிரசுரித்திருந்தது என்றும் மனுதார் கூறியிருந்தார்.

## திண்டுக்களில் மந்திரி யோகம்

புதுடில்லி, ஜூலை 2

இந்திய பாணியில் திண்டுகளில் சாய்ந்துகொண்டு கீழே அமர்ந்தபடி ஆலோசனை நடத்துவதற்கேற்றதாய் ஆலோசனை அறைகள் இருக்கவேண்டும் என மத்திய சமூதாய நல மந்திரி திரு. எஸ். கே. டே கருதுகிறார்.

சென்ற வாரம் இருபர்கள் கோஷ்டியொன்றை அவர் அழைத்திருந்தார். இருபர்கள் போனபோது அங்கிருந்தவர்கள் வெளியிலேயே பாதரட்சைகளைக் கழற்றிவைத்துவிட்டு வருமாறு சொன்னார்கள். இதைக் கண்டு இருபர்கள் ஆச்சரியமடைந்தனர்.

ஏன் என்று சிலர் கேட்டார்கள். சிலர் கதவைத் திறந்து எட்டிப்பார்த்தார்கள். ஏன் என்பது புரிந்துவிட்டது, தரையில் ஜமுக்காள விரிப்பின்மீது பல திண்டுகள் போடப்பட்டிருந்தன.

மந்திரி வந்தார். "இங்கே உங்களுக்கு எல்லாம் சௌகரியமாக இருக்கும் என நினைக்கிறேன். மேஜை நாற்காலிகளுடன் கூடிய வழக்கமான அறை ஒன்றும், இம்மாதிரி திண்டுகளுடன் கூடிய அறையொன்றும் நான் வைத்திருக்கிறேன். அந்தரங்கமாகவும் பூர்வாங்கமாகவும் பேசும் சந்தர்ப்பங்களில் இந்த அறையை உபயோகிப்பேன்" என்று விளக்கினார் மந்திரி.

## பெரும் சூபர்ஸானிக் விமானங்கள்

### அமெரிக்கா கட்டும்

வாஷிங்டன், ஜூலை 2

சூபர்ஸானிக் விமானங்களை கட்டும் வேலையை அமெரிக்கா துரிதப்படுத்தும்.

இவற்றின் மாதிரி அமைப்புக்காக 14 கோடி டாலர் அனுமதிக்கும்படி தாம் காங்கிரசைக் கோரப் போவதாக ஜனாதிபதி ஜோன்ஸன் கூறினார்.

இரு கம்பெனிகள் இந்த விமானங்களைக் கட்டும்.

இந்த விமான உற்பத்தி ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குப் போட்டியாக இருப்பதுடன், அந்த நாடுகளின் விமானங்களை விடப்பெரிதாகவும், அதிக வேகம் கொண்டதாயும் இருக்கும்.

## அல்ஜீயர்ஸில் சுபந்திரியோ

அல்ஜீயர்ஸ், ஜூலை 2

இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ அல்ஜீயர்ஸ் வந்திருக்கிறார். ஆசிய ஆபிரிக்க உச்சி மகாநாடுபற்றி அவர் புதிய அல்ஜீரியத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார் என அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் முன்னாள் ஜனாதிபதி பென்பெல்லா அகற்றப்பட்ட விதம் குறித்து பல ஆபிரிக்க நாடுகள் அதிருப்தி கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## நூற்றாண்டின் மிகப்பெரும் கிரிக்கெட் வீரர் மறைவு

டர்பன், ஜூலை 2

இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் கிரிக்கெட் வீரர்களில் ஒருவரான வால்டர் ஹேமன் தென்னாபிரிக்காவிலுள்ள டர்பனில் காலமானார். அவருக்கு வயது 62

இங்கிலாந்து கோஷ்டியின் காப்டனாக இருந்த அவர் 85 டெஸ்டுகளில் ஆடியிருக்கிறார். இவர் எடுத்த செஞ்சரிகள் 170.

1947-ம் ஆண்டு ஹேமன் ஓய்வுபெற்று தென்னாபிரிக்காவில் வசிக்க ஆரம்பித்தார். மிகச்சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரரை உலகம் இழந்துவிட்டது என்று இங்கிலாந்து காப்டனான லென் ஹட்டன் அவரது மரணம்பற்றிக் குறிப்பிடுகையில் தெரிவித்தார்.

## 2 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர்

புதுடில்லி, ஜூலை 2

திரிபுரா-கிழக்கு பாகிஸ்தான் எல்லையிலுள்ள பெலோனியா நகர் மீது கிழக்குப் பாகிஸ்தானியர் நேற்றும் தொடர்ந்து சுட்டனர். இந்திய பொலிசார் திருப்பிச் சுட்டதில் 2 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை லதிதிலா-தமாபாரி பகுதியில் 150 ரவுண்டுகள் பாகிஸ்தானியர் சுட்டனர். திருப்பிச்சுட்டதும் சுடுவதை அவர்கள் நிறுத்திக் கொண்டுவிட்டனர்.

## ஹானோய் மறுத்தால் சண்டையிடுவோம்

வெல்லிங்டன், ஜூலை 2

காமன்வெல்த் அமைதிக் குழுவைச் சந்திக்க வடவியட்நாம் மறுக்குமானால் மாதக் கடைசியில் நியூஸிலந்து துருப்புகள் தென்வியட்நாமுக்கு அனுப்பப்படும் என அந்நாட்டின் பிரதமர் திரு. ஹோலியோக் தெரிவித்தார்.

## பிலாய் ஆலை

புதுடில்லி, ஜூலை 2

பிலாய் உருக்காலைக்குத் தேவையான 76000 டன் சாதனங்கள் ஏற்கனவே வந்து சேர்ந்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

## தொழிலதிபர் தாராளம்

சென்னை, ஜூலை 2

தூத்துக்குடியில் 250 மெகாவாட் மின்சார நிலையம் ஒன்றை அமைத்துத்தர தொழிலதிபர் ஒருவர் முன்வந்ததை அரசாங்கம் ஏற்றிருக்கிறது.

## பாப்பரசர் நியூயோர்க்வருவார்

நியூயோர்க், ஜூலை 2

ஐ. நா. பொதுச்சபையின் அடுத்த கூட்டத்தின்போது போப்பாண்டவர் பால் இங்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. வருகிற டிசம்பர் மாதம் இக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

## யூகோ-ரஷ்ய கூட்டறிக்கை

மாஸ்கோ, ஜூலை 2

உலக படைக்குறைப்பு மகாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டுமென யூகோ அதிபர் டிட்டோ மாஸ்கோவுக்கு விஜயம் செய்து திரும்பியபின் விடுக்கப்பட்ட யூகோஸ்லேவிய-ரஷ்ய கூட்டறிக்கை தெரிவிக்கிறது.

உலக நிலைமை வரவர மோசமாகி வருவது குறித்து கூட்டறிக்கையில் கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வியட்நாம் மீதும், டொமினிக்கன் குடியரசிலும் அமெரிக்கத் தலையீட்டை அது கண்டனம் செய்திருக்கிறது.

## தென்ரோடீஷியா

சாலிஸ்பரி, ஜூலை 2

தென்ரோடீஷியா சம்பந்தமாக அரசியல் அமைப்பு மகாநாடு ஒன்றை பிரிட்டன் நடத்துமானால், உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதற்கொப்பாகும் என பிரதமர் இயான் ஸ்மித் கூறினார்.

## சீனவும் ஐ.நா.வும் அமெரிக்காவின் போக்கு மாறும்?

லண்டன், ஜூலை 2


சீனவை ஐ. நா. வில் அனுமதிப்பது பற்றி ஆலோசிக்க அமெரிக்கா இப்போது தயாராய் இருக்கிறதென முன்னாள் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. பெட்ரிக் கோர்டன் வாக்கர் கூறினார்.

4 நாள் அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு லண்டன் திரும்பியபின் திரு. வாக்கர் இக்கருத்தைத் தெரிவித்தார்.

## ஏமன் பிரதமர் ராஜினாமா

ஏடன், ஜூலை 2

ஏமன் பிரதமமந்திரி ஜனாதிபதியுடன் ஏற்பட்ட அபிப்பிராயபேதம் காரணமாக தமது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டதாய் அறிவிக்கப்படுகிறது.



"ஜெமினி 4" அமெரிக்க வான்வெளிக் கிரகத்தில் பிரயாணம் செய்த வைட், கப்பலை விட்டு வெளியே வந்து வானவெளியில் மிதப்பதைப் படத்தில் காண்க. 21 நிமிஷம் இப்படி அவர் அயனவெளியில் நீந்திக்கொண்டிருக்கும்போது, மற்றோர் வீரரான மெகுடிவிட் அவரைப் படமெடுப்பதற்காக "போஸ்" கொடுக்கிறார்.

## தேசிய விளையாட்டுக்கழகம்

யாழ்ப்பாணம், சனி

இணுவில் தேசிய விளையாட்டுக் கழகம் இணுவில் ஸ்ரீசிவகாமசுந்தரி சன சமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்பட்டது. கழகத்தின் ஆரம்பக் கூட்டத்தை திரு. செ. இலகுநாதன் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், விளையாட்டுத் துறையில் சகலரும் ஈடுபட்டு நமது தேசிய விளையாட்டுக்களை அழியவிடாது பாதுகாக்க வேண்டுமென்று கூறினார்.

திருவாளர்கள் க. வேதநாயகம், ம. பரமநாதன், ச. செல்வரத்தினம் உட்பட பலர் பேசினார்கள். கழக உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:- போஷகர்கள்: திரு. சி. பொன்னம்பலம், திரு. ச. செல்வரத்தினம், தலைவர்: செ. இலகுநாதன், உபதலைவர்: ம. பரமநாதன், செயலாளர்: ஆ. வடிவேலு; உபசெயலாளர்: ந. கமலநாதன், தனாதிகாரி: மு. பரமலிங்கம் பதினொருபேர்கொண்ட ஒரு உபசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## குடிநீர் வசதி

சாவகச்சேரி, வெள்ளி

கரைச்சி பகுதியில் தற்பொழுது நிலவிவரும் கடுமையான வரட்சி காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடிநீர் வசதி குறைந்த உமையாள்புரம், தட்டுவன்கொட்டிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய கரைச்சி கிராம சபை முடிவுசெய்துள்ளது.


REGAL - JAFFNA
NOW SHOWING
Howard Keel
in
ARMOURED COMMAND
(War Film)


## சந்தன மாதா தேவாலய உற்சவம்

புத்தளம், வெள்ளி

புத்தளம் தலவிலை சந்தன மாதா தேவாலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 15-ம் திகதி தொடக்கம் இரண்டு வாரங்களுக்கு நடைபெறும். முதல் வாரத்தில் ஆராதனைகளும் பிரார்த்தனைகளும் தமிழிலும், இரண்டாம் வாரத்தில் சிங்களத்திலும் நடைபெறும்.

வழமைபோல் இவ்வருடமும் பெருந்திரளான மக்கள் வருவார்களென ஆலய நிர்வாகிகள் எதிர்பார்ப்பதால், வாடகைக்குக் கொடுப்பதற்காக நூற்றுக்கணக்கான தற்காலிக குடில்கள் கட்டப்படுகின்றன.

உற்சவத்தின்போது உதவி செய்யத் தொண்டர் படைகள் திரட்டப்படுவதுடன் பொலிஸ் இலாகாவால் தற்காலிக பொலிஸ் நிலையமும், போக்குவரத்து இலாகாவால் தற்காலிக புகையிரத நிலையமும், பஸ் நிலையமும், சுகாதார இலாகாவால் தற்காலிக வைத்தியசாலையும் அமைக்கப்படுகின்றன.

## ஆலயத்தில் சபாவின் பணி

யாழ்ப்பாணம், சனி

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவ காலத்தில் பிரயாண வசதி, சுகாதாரவசதி, குடிநீர் வசதி, அன்னதானம் முதலிய வசதிகளைச் செய்ய அரசாங்கத்துடனும் பல சமூக ஸ்தாபனங்களுடனும் சேர்ந்து வேண்டிய ஒழுங்குகளை சப்ததீவு இந்து மகா சபையினர் செய்துள்ளனர்.

உற்சவம் சென்ற செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. சபாவினர் யாத்திரீக குழந்தைகளுக்கு இலவசமாக பால் விநியோகிக்கவும் வேண்டிய ஒழுங்குகள் செய்துள்ளனர்.

# "குருத்துவப்பட்டம் இலகுவானது அல்ல, அது ஒரு தனித்தன்மை வாய்ந்தது"

## அகில பிராமண குரு சமூக சேவா சங்கத்தின் முதலாம் வருடாந்த மகாநாடு

"கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்ற அகில இலங்கைச் சைவசமயக் குருமார்சபை யூர், கழிந்த இரு ஆண்டுகளாகச் சேவைசெய்த பிராமண சமூக சேவா சங்கமும் சென்ற ஆண்டில் இணைந்து அகில பிராமணகுரு சமூகசேவா சங்கம் என்ற பெயருடன் சேவை செய்யத் தொடங்கியமை பிராமண சமூகத்தவருக்கு மாத்திரமல்ல, சைவசமயத்தைச் சார்ந்த எல்லோருக்கும் பெரும் பயன் உண்டாகும்" என யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோவில் வசந்தமண்டபத்தில் சமீபத்தில் நடைபெற்ற அகில பிராமணகுரு சமூகசேவாசங்கத்தின் முதலாம் வருடாந்த மகாநாட்டு முதல்நாள் நிகழ்ச்சியில் வித்துவான் கணேச ஐயர் அரங்கில் தலைமைவகித்த சிவஸ்ரீ ச. கணபதீசுவரக் குருக்கள் தமது தலைமையுரையில் கூறினார்.

தொடக்கத்தில் வேதசிவாகம ஏட்டுச்சுவடி ஊர்வலம் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலிலிருந்து புறப்பட்டு மகாநாட்டு அரங்கை அடைந்ததுடன் வேதபாராயணமும், திருமுறை ஓதலும் நடைபெற்றன.

"தமிழன்னையின் சிறப்பை உலகறியச்செய்த வித்துவான் கணேசஐயர் போன்ற மகான்கள் எமது மத்தியில் இன்னும் பலர் தோன்றவேண்டும். அவர் பெயரால் இந்த அரங்கைத் திறந்துவைக்கும் பாக்கியம் கிடைத்தமையால் பெருமையடைகிறேன்" எனக்கூறி பிரதிஷ்டாபூஷணம் நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அரங்கைத்திறந்துவைத்து வரவேற்புரையும் நிகழ்த்தினார்.

'திருக்குறள் காட்டும் அறம்' என்ற தலைப்புடன் பேசிய வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" என்ற குறள் ஒன்றே பிராமண சமூகத்தவர் அறத்தின்வழி வாழ்பவர் என்பதற்குப் போதிய சான்றாகுமெனப் பலபட விரித்துக் கூறினார்.

"கடவுள் பக்தி ஒன்றே மனிதவாழ்வு பயன்படுவதற்கு வாய்ப்புடையது. பிராமண சமூகத்தவர் அநுதினமும் செய்துவரும் செயல்கள் யாவும் பக்திமார்க்கத்தை வளர்ப்பன. அதற்குத் திருவாசகம் ஒரு சிறந்த வழிகாட்டியாகும்" என்று வித்துவான் பொன். கனகசபை 'திருவாசகம் என்னும் தேன்' என்ற தலைப்பில் பேசினார்.

வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரி பாராட்டுரை கூறினார். பிரம்மஸ்ரீ தி. ச. தியாகராஜ ஐயர் நன்றியுரை கூறினார்.

முத்தமிழ்மணி பிரமஸ்ரீ வி. எஸ். என். மணிபாகவதர் "சிவபூஜையால் சிரஞ்சீவியான செல்வன்" என்ற தலைப்பில் மார்க்கண்டேய சரித்திரத்தை, பக்கவாத்திய சகிதமாகச் சிறப்புரை செய்ய முதல்நாள் நிகழ்ச்சிகள் நிறைவேறின.

### இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நிகழ்ச்சிகள் மாவை ஆதீனம் பிரமஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் தலைமையில், வேத—தமிழ் வேத பாராயணங்களுடன் தொடங்கிய போது, யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம், "குருத்துவப்பட்டம் என்பது இலகுவானது அல்ல, அது ஒருதனித்தன்மை வாய்ந்தது. குருமார் சிறப்படைவதற்கு விசேட கட்டுப்பாடுகள் வேண்டும். ஏனைய சமயத்தவரிடையே உள்ளவை போன்ற கட்டுப்பாடுகள் சைவ சமயத்தில் இல்லை. இதுவே ஒருவகையில் நமது பலமாகவும், பிறிதொரு வகையில் பலவீனமாகவும் உள்ளது. குருத்துவத் தன்மைக்கு ஏற்றவாறு சமஸ்கிருதம்-வேத ஆகமக் கல்வி, தமிழறிவு, தேகாரோக்கியம் என்பவற்றைப் பெறுவதற்கு இச்சங்கம் வழிவகுக்க வேண்டும்" எனக்கூறி முன்னேஸ்வரம் தேவஸ்தான ஆதீனம் சோமாஸ்கந்தக் குருக்கள் அரங்கைத் திறந்து வைத்தார்.

"ஞானதீபம்" பத்திராசிரியர் பிரமஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா யாவரையும் வரவேற்றுச் சிறப்புரை நிகழ்த்தினார். "விஞ்ஞான வாழ்வில் சமயத்தின்பங்கு" என்ற தலைப்பில் நீர்கொழும்பு ஆசிரியர் திரு. எஸ். சோமாஸ்கந்தனும் "எமது சமூகத்தின் எதிர்காலம்" என்பது பற்றி பிரஸ்ரீ சோ. இராமசந்திரக்குருக்களும் "தர்மசாஸ்திரம்" என்பதுபற்றி சிவஸ்ரீ க. சாம்பசிவக் குருக்களும் கருத்துரைகள் வழங்கினர். பிரமஸ்ரீ சோ. சிவசுப்பிரமணிய ஐயர் நன்றிகூற நாதஸ்வர இசைவிருந்துடன் பிற்பகல் நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

மாலை 7-30 மணியளவில் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் தலைமையில், வேத பாராயணம்-திருமுறைப் பாராயணம் என்பவற்றுடன் இறுதி நிகழ்ச்சிகள் தொடங்கிய போது யாழ்ப்பாண அரசாங்க உதவி அதிபர் திரு. ஆ. பெருமையினார் முகாந்திரம் சதாசிவ ஐயர் அரங்கைத் திறந்துவைத்தார். சௌரவ பொதுக் காரியதரிசி பிரமஸ்ரீ ப. வித்தியானந்தசர்மா வரவேற்புரை கூறினார். அவர் சங்கத்திட்டங்களையும் விரிவாகக் விளக்கினார். குருமாருக்கு ஒழுக்கமே தலைசிறந்த ஆபரணமாகும் எனத் தலைவர் தமது தலைமைஉரையிற் கூறினார்.

"குருவும் சீடனும்" என்பது பற்றி யாழ் வைத்தீசுவர மகாவித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகனும் "சைவ சமயமும் குருமாரும்" என்பது பற்றி திரு சி. உ. சோமசேகரமும் பொருள்செறிந்த உரை நிகழ்த்தினர். பாராட்டுரை வழங்கிய பிரமஸ்ரீ கே பி. ஹரன் சந்தியாவந்தனம்பற்றி வற்புறுத்திக் கூறினார், கொழும்பு, கப்பித்தாவத்தை செல்வ விநாயகர் ஆலய குரு சிவஸ்ரீ பா. சண்முகரத்தினக் குருக்களுக்கு அவரது 25 வருட சேவை நலம் பாராட்டுப் பத்திரம் ஒன்றை அக்குருச் சங்கம் வழங்கிறது. பண்டிதர் பிரமஸ்ரீ ச பஞ்சாட்சர சர்மா நன்றி கூறினார்.

ஈற்றில், பிரமஸ்ரீ ஏ. சங்கரய்யர் கோஷ்டியினரது இன்னிசை விருந்துடன் இரவு 12 மணியளவில் விழா நிகழ்ச்சிகள் பூர்த்தியாயின.

## சீர்காழி வருகிறார்

உடுப்பிட்டி, வெள்ளி

பிரபல தென்னிந்திய கர்நாடகசங்கீதவித்வானும், திரைப்படப் பின்னணிப் பாடகருமான சீர்காழி கோவிந்தராஜன் வெகு விரைவில் இலங்கை வரவிருக்கிறாரெனத் தெரிகிறது.


மகத்தான 2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)

என். டி. ராமராவ், அஞ்சலிதேவி,
ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா,
மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா
மற்றும் பலர் நடித்த




# லவகுசா

(முழுநீள கலர்ப்படம்)

உலகம் போற்றும் புகழும் இராமாயண காவியத்தின்
தித்திக்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ் திரைகளில் பார்த்து மகிழுங்கள்!








# பாடா

Sunsteps

இலங்கைத் தொழிலாளர்களால் டிசைனிடப்பட்டு தயாரிக்கப்பட்டவை.

## விளம்பரம்

### மாபெரும் வரவேற்பு விழா

அமைச்சர் மு. திருச்செல்வம் அவர்களையும் திரு சி. கதிரவேற்பிள்ளை அவர்களையும் கௌரவிக்குமுகமாக திரு மு. பரமலிங்கம் அவர்கள் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் கோப்பாய் சந்திக்கு அருகாமையில் மாபெரும் வரவேற்பு விழா நடைபெறும்.

வரவேற்புக்குழு
445 கோப்பாய்


## பட்டதாரிகளின் கோரிக்கை

உடுப்பிட்டி, வெள்ளி

வேலையற்ற தமிழ் இலங்கைப் பட்டதாரிகள் சங்கத்தின் சார்பில் திரு. வி. ஸ்ரீசக்கரராசா தலைமையில் தூதுகோஷ்டியொன்று உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்தை சந்தித்து, கடந்த ஜனவரி மாதத்தில் தமக்கு நியமனம் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தபோதும் இதுவரையில் எதுவித நியமனமும் வழங்கப்படவில்லையென்றும் இத் தூதுக்குழு புகார் தெரிவித்தது. அவர்களைச் சிறிது பொறுத்திருக்குமாறும் இதுவரையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டனவே தவிர எவருக்கும் நியமனம் வழங்கப்படவில்லையென்றும் மந்திரியின் வாக்குறுதியை இத்திட்டத்திற்குள் நிறைவேற்றித் தருவதற்குத் தாம் முயற்சிசெய்வதாகவும் எம். பி. தெரிவித்தார்.

## 'நல்லவனுகவும் வல்லவனுகவும் வாழ விளையாட்டு வழிகாட்டும்'

சுழிபுரம், வெள்ளி

"புத்தக கல்வி மூலம் கற்க முடியாதவற்றை விளையாட்டுகள் மூலம் கற்கலாம். விளையாட்டு வீரன் நல்லவனுகவும் வல்லவனுகவும் வாழ இன்றுள்ள நிகள் விளையாட்டுப் போட்டிகள் வழிகாட்ட வேண்டும்" என்று யாழ்ப்பாண வைத்தியசாலை டாக்டர் எ கபேறியல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். விழாவுக்கு கல்லூரி அதிபர் வி. தம்பு தலைமை வகித்தார் டாக்டர் கபேறியல் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஒழுக்கமுடையவர் வாழ்வு உயரப்படும். ஒழுக்கம் தேககம் இரண்டையும் ஒருங்கே கற்றுக் கொடுப்பது விளையாட்டாகும். புத்தகப் படிப்போடு மட்டும் நில்லாமல் விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொள்ள வேண்டும்.

நான்கு இல்லங்களுக்கு இடையே போட்டி நடைபெற்று நீல இல்லம் 309 1/4 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும், சிவப்பு இல்லம் 247 4/1 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும், மஞ்சள் இல்லம் 198 3/4 புள்ளிகளை பெற்று மூன்றும் இடத்தையும், பச்சை இல்லம் 168 1/4 புள்ளிகளை பெற்று நான்காவது இடத்தையும் பெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி கபேறியல் பரிசுகள் வழங்கினர்.

போட்டி முடிவுகள் வருமாறு:-

தட்டெறிதல் மேற்பிரிவு ஆண்- என் சண்முகதாசன், ஏ செல்லத்துரை, எம். சடாச்சரம்.

உயரம் பாய்தல் மத்திய பிரிவு- எ. கணேசலிங்கம், எ. சிவசுப்பிரமணியம், ஆர் நடராசா.

100 யார் ஓட்டம் மேற்பிரிவு பெண்- பி கைலாயவதியார், கே. சத்தியபாமா, கே. கமலேஸ்வரி.

100 யார் ஓட்டம் மத்திய பிரிவு பெண்- என். சிவலோகநாயகி, ரி. விமலாதேவி, எம். ஞானமலர்.

75 யார் ஓட்டம் கீழ்ப்பிரிவு பெண்- என். மதிவதனி, கே. சந்திரகாந்தா, ஏ. இரத்தினேஸ்வரி.

நீளப் பாய்தல் கீழ்ப்பிரிவு ஆண். எம். மகாலிங்கம், கே இராசேந்திரன், ஆர். தங்கராசா.

150 யார் ஓட்டம் கீழ்ப்பிரிவு பெண்- எம். பரமேஸ்வரி, என் நவநீசும், என். ஜோதீஸ்வரி

220 யார் ஓட்டம் மத்திய பிரிவு பெண்- என். சிவமோகநாயகி பி. சித்திராதேவி, எம். ஞானமலர்.

220 யார் ஓட்டம் மேற்பிரிவு பெண்- ரி. கைலாயவதியார், கே. கமலேஸ்வரி, கே. சண்டிராணி.

ஒரு மைல் ஓட்டம் ஆண்- எம். தவராசா, எ. பத்மநாதன், கே. சிவராசா.

ஒழுங்கு பவனி- சிவப்பு இல்லம், நீல இல்லம், பச்சை இல்லம், மஞ்சள் இல்லம்.

100 யார் ஓட்டம் கீழ்ப்பிரிவு ஆண்- என். தெய்வேந்திரம், எம். மகாலிங்கம், கே. முத்துராசா.

100 யார் ஓட்டம் மத்திய பிரிவு ஆண்- ரி. தர்மலிங்கம், என். நாகேந்திரன், பி சண்முகராசா.

100 யார் ஓட்டம் மேற்பிரிவு ஆண்- எம். சக்திகுரு வி. திருநாவுக்கரசு, எ. சண்முகநாதன்.

நிதான ஓட்டம் கீழ்பிரிவு பெண்- வு சூரியகுமாரி, எஸ் புஸ்பராணி, கே. தவமலர்.

நிதான ஓட்டம் மத்தியபிரிவு பெண்- கே குசபூசணி, எல தெய்வராணி, ஆர். பரமேஸ்வரி.

நிதான ஓட்டம் மேற்பிரிவு பெண்- எம். நச்சியார், என் நாகேஸ்வரி, கே. இராசேஸ்வரி ராணி.

---

## பெற்றோர் தின விழா

யாழ்ப்பாணம், சனி

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய பெற்றோர் தின விழா இன்று மாலை யாழ்ப்பாணம் எம். பி. திரு ஜி ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும்.

---

## 'பஞ்சபாணம்'
### வானொலியில் புதிய நிகழ்ச்சி

இம்மாதத்திலிருந்து இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பின் தமிழ்ப்பகுதியில் 'பஞ்சபாணம்' என்ற புதிய நிகழ்ச்சி ஒன்று இடம்பெறும். கேயர்கள் மூன்னிலையில் றோயல் கல்லூரி மண்டபத்தில் மாதம் ஒருமுறை ஒலிப்பதிவு செய்யப்படவிருக்கும் இந்நிகழ்ச்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட விடைக்குழுவினர் ஒவ்வொருவரும் தமயிடம் கேட்கப்படும் ஐந்து கேள்விகளுக்குப் பதலளிப்பார்கள். அதிக புள்ளி பெறுவோருக்கு இரண்டு பரிசுகள் வழங்கப்படும். முதல் நிகழ்ச்சியின் ஒலிப்பதிவு இம்மாதம் 12 ந் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்ச்சி ஜூலைமாதம் 13 ந் திகதி முதல் பட்சத்துக்கு ஒருமுறையாக செவ்வாய்க்கிழமையில் இரவு 7-30 தொடக்கம் 8-00 மணிவரை ஒலிபரப்பப்படும். நிகழ்ச்சியை நேரிற்காண விரும்புவோரும் விடைக்குழுவிற் பங்குபற்ற விரும்புவோரும் தமிழ் நிகழ்ச்சி அதிகாரிக்கு எழுதவேண்டும். இதற்கு முன் நடைபெற்ற விவேகச் சக்கரம் என்ற நிகழ்ச்சிக்கு பதிலாக இப் புதிய நிகழ்ச்சி இடம்பெறுகிறது.


## ரஸ்தா போக்கு வரத்து அறிவித்தல்
### 1965 நடைபெறும் நல்லூர்க் கந்தசாமி கோவிலின் வருடாந்த உற்சவ விழா

மேற்படி விழாவின் பொருட்டாக 1965 ஆகஸ்ட் மாதம் 2-ம் திகதிதொடக்கம் ஆகஸ்ட் 27ம்திகதிவரைஉட்பட்ட நாட்களிலும் கீழ்க்கண்ட ரஸ்தாக்களில் யாவும் சகலவித வாகனப் போக்குவரத்துக்கும் மூடப்பட்டிருக்கும்.

1. அரசடிச் சந்திக்கும் 2வது மைல் கல்லுக்குமிடையில் உள்ள பருத்தித்துறை வீதியின் அந்தப் பகுதி.

2. பண்டாரக்குளம் ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக்குமிடையிலுள்ள கோவில் ரோட்டின் அந்தப் பகுதி.

வாகனப் போக்கு வரத்துக்கு மூடப்பட்டிருக்கும் எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் அரசாங்க கடமையின் நிமித்தம் செல்லவேண்டிய உத்தியோகத்தர்களுக்கும் கோவில் வளவில் நிறுவப்பட்டிருக்கும் தற்காலிக பொலிஸ் நிலையத்தில் 2-8-65 பிற்பகல் தொடக்கம் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

### வாகனங்கள் பிரிந்து செல்லல்

வாகனப் போக்குவரத்துகளில் சாரதிகள் கீழ்க்காணும் பாதைகளில் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

1. யாழ்ப்பாணத்திசையிலிருந்து கோப்பாய்நோக்கிப்போகும்போது (அல்லது எதிர் திசையில்) நாவலர் ரோட், நல்லூர் குறுக்கு ரோட் முதலியவற்றில் செல்லுதல் வேண்டும்.

2. அரசடி ரோட் வழியாக கோப்பாய் நோக்கிப் போகும்போது (அல்லது எதிர் திசையில்) வைமன் ரோட், நாவலர் ரோட், நல்லூர் குறுக்கு ரோட் முதலியவற்றில் செல்லுதல் வேண்டும்.

### வாகனங்களை நிறுத்தி வைத்தல்

வழிபடுவோரின் வசதியை உத்தேசித்து வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான மூன்று இடங்கள் ஒதுக்கி வைக்கப்படும். மேலும் இவ்விடங்களை நன்கு பார்க்குமாறு சாரதிகள் அனைவருக்கும் சிபார்சு செய்யப்படுகின்றது.

### மேற்படி இடங்களாவன

1. அரசடி ரோட் ஊடாக கந்தசாமி கோவிலுக்கு வரும் வாகனங்களை அம்மன் கோவிலின் மைதானத்தில் நிறுத்தலாம்.

2. தென்பகுதியிலிருந்து கோவிலுக்கு வரும் வாகனங்களை கைலாச பிள்ளையார் கோவில் மைதானத்தில் நிறுத்தலாம்.

3. கோப்பாய் திசையிலிருந்து கந்தசாமிகோவிலுக்கு வரும் வாகனங்களை முத்திரைச்சந்தை மைதானத்தில் நிறுத்தலாம்.

(ஏ. ஜே. இடமக்கொட)
உதவி பொலிஸ் அதிபர்
யாழ்ப்பாணம் மாவட்டம்

பொலிஸ் அலுவலகம்,
யாழ்ப்பாணம், 30-6-65.
446



## வரி விளம்பரம்

### கல்வி

G A Q, G S. Q, B. A. B. Sc, G C E, (A/L-Arts & Science) மாலைநேர வகுப்புகள் தலைகளை வகுப்புகள் மேற்படி பரீட்சைகளுக்கு 1966-ம் ஆண்டு தொடக்கம் தோற்றுபவர்களுக்கான வகுப்புகள் 12-7-65 திங்கட்கிழமை மு. ப. 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் ஆரம்பமாகும். தூயகணிதம் பிரயோககணிதம் உட்பட எல்லாப் பாடங்களும் அனுபவமும் திறமையுமுள்ள ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். சேரவிரும்புவோர் பரீட்சையையும் பாடங்களையும் குறிப்பிட்டுப் பத்து சத முத்திரை ஒட்டி விலாசம் எழுதப்பட்ட உறையுடன் உடனே விண்ணப்பிக்கவும். நா. க. காசிப்பிள்ளை பொதுக்காரியதரிசி, வடபிரதேச ஆசிரிய சங்கம், இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம். 697

தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆங்கிலத்தில், தமிழில் கணக்குப் பதிவியல், சிங்களம், ஆங்கிலம், ஜி. சி. ஈ. சாதாரணம், உயர், வஞ்ஞானம், வர்த்தகம் அரசாங்க பரீட்சைக்குரிய வகுப்புகள், காலை மாலை வகுப்புகள்: யாழ். கல்லூரி, 426 ஆஸ்பத்திரி ரோடு, யாழ்ப்பாணம். பெண்களுக்கு மட்டும்: 29, பருத்தித்துறை ரோடு, யாழ்ப்பாணம். 602

### பொது அறிவு வினுவிடை

மத்திய எழுதுவினைஞர் முதலான பகிரங்க பரீட்சைகளுக்கான ஆயிரத்துக்கு மேற்பட்ட அம்சங்கள் நிறைந்த கைநூல். விலை ரூபா 2/- ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை, யாழ்ப்பாணம். 603

### கல்வி
### விசேஷ வகுப்பு

எண்கணிதம்: சனி, ஞாயிறு முழு நேரம் — பெண்களுக்கு மட்டும், ஆங்கிலம்: கிழமை நாட்களில் மாலை 4-30 முதல் 5-30 வரை — இருபாலார்க்கும். சித்தியில்லையேல் பணம் வாபஸ். விபரங்கட்கு: வர்த்தக கலாசாலை, 230 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 605

தொய்வு, கசம், நீரிழிவு, வெண்மை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம். மாதிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்றுயர்ந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர். கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்க விரும்புகிறீர்களா? இதோ எமது புதிய ஸ்தாபனத்திற்கு விஜயஞ்செய்யுங்கள், அத்துடன் நிக்கல் குரோமியம், எலக்றோ பிளேற்றிங்கும் செய்துகொடுக்கப்படும். பாலன் எலெக்ற்றோ பிளேற்றிங் வேர்க்ஸ், 424 A, கே கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 584

ஒருவரத சொந்த பாவிப்பில் உள்ளதும் மிக உன்னத நிலையுடையதுமான ஒரு 'ரேசுறக்கோட்' விற்பனைக்கு உண்டு S.M பரீத், 66, கொழும்புத்துறை வீதி, கண்டிக்குளி.

நல்ல நிலைமையிலுள்ள EY 1000 தொடர் இலக்கமுள்ள இர்மன் மிக்ஸ் கார் விற்பனைக்குண்டு. நம். 5, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம் 598

### வேலைவாய்ப்பு

பொலிஸ் கன்ஸ்டபிள் பதவிக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் மேற்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம் வர்த்தககலாசாலை, 230 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 604


## சுதந்திர கட்சியின் பொதுக்கூட்டம்

இரத்தினபுரி, வெள்ளி

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் ஜூலை மாதம் 4ம் தேதி இரத்தினபுரியில் நடைபெறும்.

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திருவாளர்கள் ஆர். ஜி. சேனநாயக்கா, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோர் பேசுவார்கள்.

## 2000 பேருக்கு வேலை கிடைக்கும்

கொழும்பு, வெள்ளி

அடுத்தவருட முடிவிற்குள் ஆயிரம் மேலதிக பஸ்களை சேவையிலீடுபடுத்த இலங்கை போக்குவரத்துச்சபை தலைவர் திரு. ஆர். ரி. டி. சில்வா திட்டமிட்டுள்ளார். தற்பொழுது 2900 பஸ்கள் சேவையிடுபடுகின்றனவென்றும் இத்தொகையை 4000 ஆக்குவதற்கு முயற்சிசெய்யப்படுமென்று அவர் கூறினர்.

இத்திட்டத்தின் மூலம் 2000 சாரதிகளுக்கும், கண்டக்டர்களுக்கும் வேலைகிடைக்கக்கூடியதாயிருக்கும்.

---

## கரும்பு செய்கைக்கு 4000 ஏக்கர்

கொழும்பு, வெள்ளி

நாலாயிரம் ஏக்கர் நிலம் கரும்புச்செய்கைக்காக இவ்வருடம் கல்லோயா சீனித்தொழிற்சாலையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

## வானொலி நிகழ்ச்சிகள்
### சனி 3-6-65
### கொழும்பு

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

காலை 6-45 காதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 சேர்ந்த இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரக்காளம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செய்திச்சுருள். 7-00 சங்கீதக்கச்சேரி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 விமர்சனம், 10-00 நேயர் விருப்பம்.

### ஞாயிறு (4-7-65)

காலை 6-45 காதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 சேர்ந்த இசை, 7-45 தமிழ்மெல்லிசை, 8-00 மாதர்நிகழ்ச்சி, 8-15 தமிழ்மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் பாடசாலை, 9-30 திரை இசை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 நாடகம் - மத்தாப்பு.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரை இசை.

இரவு 6-10 வாத்திய இசை 6-15 சானவாக்கியக்கச்சேரி, 6-45 வீணை, 7-00 பாட்டு, 7-30 நாடகம், 8-00 மூஸ்லிம் நிகழ்ச்சி, 9-10 மணிவிளக்கு— மாதர்நிகழ்ச்சி, 9-45 மாதர் கேட்டவை, 10-15 சேர்ந்த இசை.

## இலங்கையின் . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியும்வரை அதிமேற்றிராசனத்தின் உதவி ஆயராக நியமிக்கப்பட்டார், 1947-ம் ஆண்டு மசோன் ஆண்டவர் கொழும்பு மேற்றிராணியாராக நியமனம் பெற்றார். கடந்த ஜனவரி மாதத்தில் கருதினலாக நியமிக்கப்பட்டார்.

இம்மாதம் கொழும்பு புதிய நகரமண்டபத்திலே இலங்கையிலுள்ள பல மதத்தலைவர்கள் கலந்து உரையாடிய பொழுது கத்தோலிக்க மக்களின் சார்பில் கருதினல்கூறே பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது. அவர் ஆற்றியசொற்பொழிவில் கூறியதாவது:

நமது தேசத்திலே உள்ள பல இன மக்களிடையே சமாதானத்தையும் ஒருவர் ஒருவரை விளங்கிக்கொள்ளும் மனப்பான்மையையும் இம்மகாநாட்டைக் கூட்டியவர்களின் முயற்சி காட்டுகிறது. இத்தகைய ஒத்துழைப்பின் பயனாக நிறுவப்படும் அரசாங்கம் சகலருடனும் நீதி நியாயத்துடன் உறவுகொள்ளும் என்பதற்கு ஐயமில்லை.

## ஐக்கியத்துக்கு . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

1787-ம் வருடம், அமெரிக்காவில் அப்போது பெருமை வாய்ந்ததும் பெரியதுமான பிலடெல்பியாவில் ஜெனரல் ஜோர்ஜ் வாஷிங்டன் தலைமையில் அமெரிக்க அரசியல் சாசனம் உருவாக்குவதுபற்றி ஆராய்வதற்கான மகாநாடு கூட்டப்பட்டது. மகாநாட்டில் 12 ராஜ்யங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். வர்த்தகர்கள், விவசாயிகள், நீதிபதிகள், வங்கிகளில் வேலை பார்ப்பவர்கள், வழக்கறிஞர்கள், அரசாங்கம், தனியார் துறைகளில் பரந்த அனுபவம் பெற்றுள்ளவர்கள் முதலானோர் கவர்னர்கள்' அப்போது கவர்னராகப் பதவி வகுத்தவர்கள் தான் இந்தப் பிரதிநிதிகள். எல்லமாக 55 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

வாஷிங்டனின் பெருமை நாடெங்கும் பரவியது. அவரது பரந்த அறிவும், சிறந்த குணமும் நாட்டு மக்களைப் பெரிதும் வசீகரித்தது. வாஷிங்டனை பிரதிநிதிகள் எல்லோரும் சேர்ந்து தலைவராக்கியதற்கு இவையும்காரணமாகும். பெஞ்சமின் பிராங்ளின், அலெச்சாண்டர் ஹெமில்டன், ஜேம்ஸ்மெடிசன், எட்மண்ட் ராண்டோல்ப் ஆகியோர் அமெரிக்க அரசியல் சாசனத்தை உருவாக்க முயன்றவர்களில் முக்கியமானவர்கள் எனக் கூறலாம்.

சமாதான முறையில் எதிர்கால சந்ததியினர் தமது தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்வதற்கு அரசியல் சாசனத்தில் வழி சமைக்க வேண்டுமென வாஷிங்டன் கருத்துக் கொண்டிருந்தார். இது முக்கியமானது எனவும் அவர் அபிப்பிராயம் வெளியிட்டார்.

1787-ம் வருடம் செப்டம்பர் 17-ம் திகதி பிரதிநிதிகள் விவரமாக ஆராயப்பட்டு உருவாக்கப்பட்ட அரசியல் சாசனத்துக்கான தமது கையொப்பங்களையிட்டார்கள். 55 பிரதிநிதிகள் இதில் கைச்சாத்திட்டனர்.

மேதினர்களின் கூட்டு முயற்சியால் அன்று உருவாக்கப்பட்ட அரசியல் சாசனம் இன்றும் ஐக்கியத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக நிலைத்து நிற்கிறது. இந்த அரசியலமைப்புதிட்டத்தின் பெருமை இப்போதும் அழியாது நிலைத்துள்ளது.

## டாக்டர் ராமதன் விஜயம் செய்வார்

கொழும்பு, வெள்ளி

கதிர்லைலாந்தில், ஜோர்டான் ஸ்தானிகராகக் கடமையாற்றும் டாக்டர் ராமதன் இம்மாதம் 14-ம் திகதி இலங்கைக்கு விஜயம்செய்வார்.

ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக் காரியாலயத்தின் ஜோர்டான் நிரந்தர பிரதிநிதியும்ஜெனிவாவிலுள்ள இஸ்லாமிய நிலையத்தின் அதிகாரியுமான டாக்டர் ரமடான் இலங்கையிலுள்ள இஸ்லாமிய தொழிலாளர்களையும் சந்திப்பார்.

பொன், ஜூலை 2

"நேட்டோ"வின் விமானப் பாதுகாப்புப்பலம் மேலும் விரிந்த அடிப்படையில் அதிகரிக்கும் பொருட்டு 10 கோடி பவுன் செலவழிக்கப்படுமென அறிவிக்கப்படுகிறது.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா சென்று திரும்பிய ஓ' ஹோட்டல்அம்பர் அங்கு ஹோட்டல்களில் நல்ல சாப்பாடு மலிவாகக் கிடைப்பதையும், அந்த மாதிரி இங்கு எங்குமே கிடைப்பதில்லை என்றும் சொன்னார். யாத்திரிகர்களின் வசதிக்காகஹோட்டல்சிப்பந்திகளின் பயிற்சிச் சாலையை கொழும்பில் ஆரம்பிப்பதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். ஐரோப்பியர் சாப்பாட்டுக்கு மட்டுமன்றி சைவச்சாப்பாட்டு முறைக்கும் தக்க பயிற்சி அளிக்க தமிழகத்திலிருந்து திறமைசாலிகளை வரவழைத்து வகுப்புகள் நடத்துவது அதிக பயனளிக்கக்கூடும். சங்கீதம்மட்டுமன்றி நல்லசமையல் கலையைக் கற்கவும் இங்கு பலர் ஆவலுடன் உள்ளனர். பிரயாணத்தடைகளை சற்றே தளர்த்தினால் இந்தக்குறை தீர்ந்து சமையல் கலையிலும் ஈழம் முன்னேறமுடியும். நமது எம்பி மார்களும் குட்டி ஹிட்லர்களான "கீழ்ப்படிதலுள்ள ஊழியர்களும்" சற்றே மனம்வைப்பார்களா?

* * *

கரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப், பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந்துறையாய், அரிய பொருளே அவிநாசியப்பா பாண்டி வெள்ளமே, தெரிய வரிய பரஞ்சோதீ செய்வதொன்று மறியேனே.

—ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்

## தேசிய சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 150 ரூபா பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:-

| | | |
|---|---|---|
| 15 Z 0413 | 07 U 0576 | 14 S 0590 |
| 03 W 0411 | 10 A 0296 | 07 V 0397 |
| 13 X 0092 | 13 N 0729 | 11 L 0288 |
| 08 P 0116 | 15 U 0293 | 07 W 0358 |
| 07 X 0331 | 13 O 0329 | 14 F 0362 |
| 10 Z 0167 | 08 V 0303 | 12 R 0760 |
| 01 A 0432 | 14 B 0632 | 13 D 0968 |
| 07 H 0819 | 04 W 0236 | 02 F 0148 |
| 04 J 0363 | 07 Z 0761 | 11 A 0763 |
| 16 L 0633 | 10 D 0729 | 08 X 0720 |
| 01 Z 0595 | 01 Q 0012 | 01 E 0633 |
| 05 M 0155 | 04 W 0868 | 05 B 0083 |
| 15 J 0074 | 14 U 0356 | 01 D 0615 |
| 12 D 0723 | 01 Q 0077 | 02 U 0107 |
| 05 V 0891 | 07 F 0301 | 04 F 0297 |
| 12 N 0375 | 06 O 0977 | 09 R 0191 |
| 04 S 0641 | 01 T 0896 | 09 S 0769 |
| 11 C 0335 | 03 V 0361 | 05 E 0399 |
| 07 P 0291 | 09 N 0576 | 16 V 0320 |
| 01 V 0277 | 14 O 0013 | 13 C 0316 |
| 08 L 0566 | 05 N 0604 | 15 A 0162 |
| 02 X 0607 | 12 W 0216 | 14 L 0393 |
| 14 L 0808 | 14E 0234 | 15 M 0097 |
| 07 N 0903 | 14 B 0532 | 03 C 0550 |
| 06 B 0914 | 07 G 0393 | 13 V 0967 |
| 06 T 0830 | 01 Z 0613 | 14 G 0625 |
| 10 W 0981 | 02 L 0715 | 06 H 0853 |
| 01 Q 0735 | 03 U 0907 | 11 P 0196 |
| 06 V 0109 | 14 N 0987 | 01 W 0032 |
| 14 N 0815 | 07 X 0663 | 06 H 0725 |
| 13 S 0378 | 02 W 0291 | 06 M 0642 |
| 01 H 0595 | 14 O 0293 | 07 U 0963 |
| 02 Z 0207 | 13 E 0552 | |
| 03 F 0403 | 02 T 0164 | |

## 'ஒத்துழைப்பு தாருங்கள்'

கொழும்பு, வெள்ளி

இந்த நாட்டுக்கும், நமது பரம்பரைக்கு, பாரம்பரியத்துக்கும் ஏற்ற புதிய கல்வித் திட்டம் மிக விரைவில் அமுல் செய்யப்படும் எனவும் இதற்கு மாணவர்களும், பெற்றோர்களும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் எனவும் கம்பஹாவில் பாடசாலை ஒன்றின் புதிய இரண்டு மாடிக் கட்டிடத்தை திறந்துவைத்துப் பேசுகையில் உதவிக் கல்விமந்திரி திரு. காமினி குணசேகரா குறிப்பிட்டார்.

## மாத உதவித் திட்டம்

யாழ்ப்பாணம், சனி

'ஈழநாடு' குருவி சஷ்டி நிவாரணச் சபையார் ஆரம்பித்த மாத உதவித் திட்டத்துக்கு ஜூன் மாதப் பணமாக 80 ரூபாவை யாழ்ப்பாணம் அந்தியகால சகாய நிதிச்சங்கத்தினர் அனுப்பி வைத்துள்ளது.

## திருக்கேதீச்சரத் . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பவம் பெற்றவர்களே, இக்கற்கள் மூலம் ஆலயத்தில் திருத்தவேலைகள் செய்யப்படும். அம்மன் மூலஸ்தானம் மாமண்டபம் முதலியவற்றை ஒன்றுசேர்த்துக் கட்டுவதிலயே இச் சிற்பாசாரியார்கள் ஈடுபடுவர். கோபுரப்பணி செய்யும்பொழுது உள்ளூர் வேலையாட்களும் இந்திய மேசன்மார்களுக்கு உதவிசெய்வார்கள்.

பழமைவாய்ந்ததும் பாடல் பெற்ற ஸ்தலமானதுமான பிரதான ஆலயத்தைத் திருத்த வேண்டுமென்ற ஸ்ரீ ஆறுமுகநாவலர் கூற்றிற்கிணங்க யாழ்ப்பாண சைவப் பெருமக்கள், திருக்கேதீச்சர திருப்பணி வேலைகள் நிறுத்தப்பட்டபின்னர் ஒன்றுசேர்ந்து ஆலயத்தின் மூலஸ்தானத்தைக் கட்டுவதற்காக யாழ்ப்பாணத்தில் சிறந்த பிரதிநிதித்துவமுள்ள ஒரு சபையை உருவாக்கினர். இவர்கள் தற்பொழுது 60,000 ரூபா சேர்த்துள்ளார்கள். இவ்வேலையை திருப்திகரமாக முடிப்பதற்கு 2 லட்சம் ரூபா தேவைப்படுகிறது. மலாயாவில் வதியும் யாழ்ப்பாணத்தவர்கள் அம்பாள் ஆலயத்தை திருத்துவதற்காக 60,000 ரூபா சேர்த்து அப்பணத்தின் ஒரு பகுதியை இங்கு அனுப்பியுள்ளார்கள். கோயிலின் சுற்றுமதில்களையும் கோபுரத்தையும் கட்டுவதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர்கள் முன்வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பணிகளில் ஒவ்வொரு சைவமதத்தவரும் பங்குபற்றிக்கொள்ள வேண்டும். இதைத்தான் ஆறுமுகநாவலரும் கூறிச்சென்றார்.

தற்பொழுது இந்திய இலங்கை போக்குவரத்திலும் சுத்தோலிக்க — சைவமக்களுக்கும் திருக்கேதீச்சரம் பற்றி இருந்த தகராறுகள் சுமுகமாக தீர்க்கப்பட்டதை நாம் ஓர் நல்ல சகுனம் என்றே கருத வேண்டும். இதன் காரணமாக இரு மதத்தவர்களும் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழ சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. திருப்பணிச் சபையாரும் சைவப் பொதுமக்களும் இந்த ஒற்றுமை கொள்கையை நாட்டின் நலன்கருதியும் சமாதானத்தின் பொருட்டும் வரவேற்பார்கள்.

### விற்பனைக்கு

600 மணித்தியாலங்கள் மட்டும் பாவித்த உழவு மெசினும், பெட்டியும், கலப்பையும் விற்பனைக்கு உண்டு. பொ. நவரெத்தினசிங்கம், புதுச் செம்மணிரோட், கல்வியங்காடு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தல் தொடர்புகொள்ளவும். போன் நம்பர்: 7210. 606

## 'மனநிறைவே சிறந்த பரிசாகும்'

யாழ்ப்பாணம், சனி

'விளையாட்டுப்போட்டியில் வெற்றி தோல்வி முக்கியமானதல்ல என்பதை மாணவர்கள் உணரவேண்டும். வெற்றியைக் கண்டும் எவ்வாறு பெருமிதமடைகின்றோமோ அதைப் போலவே தோல்வியையும் ஏற்று சாந்தி பெறவேண்டும்' என்று வைத்தீஸ்வரவித்தியாலய பிரதம வகுப்புகளின் விளையாட்டுப் போட்டிக்கு தலைமை தாங்கிய டாக்டர் கே. சி. சண்முகரத்தினம் தமது தலைமையுரையின்போது கூறினர். அவர் தொடர்ந்து கூறியதாவது:

"இளமையிலேயே நாம் வெற்றிதோல்வியை சமனாக ஏற்றுக்கொள்ளப் பழகினால் அவ்வண்ணமே பிற்காலத்தில் நம் வாழ்வில் காணும் இன்ப, துன்பங்களை சகித்துக்கொள்ள ஏதுவாய் இருக்கும் நாம் இப்பழக்கத்தை கடைப்பிடிப்பதால் நம் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. வெற்றியின் நிமித்தம் பெறும் பரிசைவிட இம்மன நிறைவே சிறந்த பரிசாகும்.

கல்வியானது அறிவை வளர்க்கின்றது. விளையாட்டுப் போட்டிகளும், ஒழுங்கு கட்டுப்பாட்டையும், சுகத்தகத்தையும் வளர்க்கின்றது".

திருமதி சண்முகரத்தினம் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினர். வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் நன்றியுரை கூறினர்.

## இன்று

இன்று காலை 9 மணி முதல் கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் "வாதவூர் வள்ளல்" என்னும் பொருள்பற்றியும் மாலை 5 மணிமுதல் கோண்டாவில் விநாயகர் ஆலயத்தில் சம்பூர்ணராமாயண விரிவுரையில் "வாலி மோட்சம் என்னும் பொருள்பற்றியும், இரவு 9-30 மணியளவில் நயினாதீவு நாகபூஷணியம்மன் ஆலயத்தில் "தடாதகைப் பிராட்டியார்" எனும் பொருள் பற்றியும் முத்தமிழ்மணி ஸ்ரீமத் வி. எஸ். எஸ். மணி பாகவதர் கதாகாலக்ஷேபம் செய்வார்.

* * *

யாழ்ப்பாணம் கோவிலை முனீஸ்வரப் பெருமானுக்கு இன்று மாலை 5 மணி முதல் ஞ்சபிட்டோதக அபிஷேகம் நடைபெறும். திரு. க. ஆறுமுகம் "நால்வர் காட்டியநெறி" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்.

* * *

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி 22-வது ஆண்டுவிழாவை முன்னிட்டு இன்று மாலை திரு. க. இராசதுரை தலைமையில் சண்டிலிப்பாய் மருதடி மைதானத்தில் பொதுக்கூட்டமொன்று நடைபெறவிருக்கிறது.

* * *

யாழ்ப்பாணம் அகில பிராமண குரு சமூக சேவா சங்கத்தினர் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையை இன்று மாலை யாழ்ப்பாணம் காயத்திரீபீடம் மண்டபத்தில் கொண்டாடுகிறார்கள்.

* * *

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இந்துசமயவிருத்திச் சங்கம் திருவாசகவிழாவை இன்று கல்லூரி மண்டபத்தில் கொண்டாடுகிறது.

* * *

நவாலி கல்லியோடை கண்ணகை அம்மன் ஆலயத்தில் மாணிக்கவாசகர் குருபூசை இன்று நடைபெறும்.

* * *

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

* * *

காரைநகர் - பண்டைத்தரிப்பான்புலம் சிதம்பரேஸ்வர சிவகாமியம்மை கோவில் 8-ந் திருவிழா இன்று சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கின்றது.

## சிங்களத் தேர்ச்சி.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் 3 வருடங்களுக்குள் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் 8வது வகுப்பு சித்தியடைந்தால் தான் அவர்களது நியமனம் உறுதிப்படுத்தப்படுமென அவர்களது உத்தியோக நியமனக் கடிதங்களில் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. அத்துடன் நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட 2 வருடங்களில் சிரேஷ்ட தராதரப்பத்திரத்துக்கு இணையான ஒரு சிங்களப் பரீட்சையிலும் சித்தியடையவேண்டுமென்றும், அல்லாதவிடத்து சம்பளஉயர்வும் உத்தியோக உயர்வும் நிறுத்தப்படவேண்டுமென்ற நிபந்தனையுமிருந்தது.

பின்னர் திறைசேரியின் 881 இலக்கமுடைய ஜூலை 20, 1962-ம் தேதிய சுற்றுநிருபத்தினுல் புதிய ஊழியர்கள் எட்டாவது வகுப்புப் பரீட்சை சித்தியடையும்வரை அவர்கள் சேவை நியமன உறுதிப்படுத்தல் பின்போடப்படும் என்றும் மூன்று வருடக் கட்டுப்பாடு தளர்த்தப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

இப்போதுள்ள புதிய ஒழுங்கின்படி சிங்களப் பரீட்சையில் சித்தியடையாமலே இப்புதிய ஊழியர்கள் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படுவார்கள் என அறியப்படுகிறது. நியமனம் உறுதிப்படுத்தப்படுவதற்கு சிங்களம் 8ம் வகுப்புப் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமெனக் கோரும் உபவிதி வாபஸாகும் என்றும் இனி வரும் புதிய நியமனங்களுக்கான நியமனக் கடிதங்களில் இந்த நிபந்தனை அகற்றப்படுமெனவும் தெரிகிறது.

ஆனாலும் நியமன உறுதிப்படுத்தலில் சம்பந்தப்படாமலே சிங்கள ஊழியர்கள் தமிழிலும், தமிழ் ஊழியர்கள் சிங்களத்திலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தேர்ச்சியடையக் கோரும் ஒரு புதிய நிபந்தனை விதிக்கப்படக் கூடுமாம்.

## சுகாதார மந்திரி இங்கு வருகிறர்

குரும்பசிட்டி, வெள்ளி

சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்தன இம்மாத இறுதியில் யாழ்ப்பாணம் விஜயம் செய்வார் என்றும், இவருடன் சுகாதாரசேவை டைரக்டர் திரு. ஹேரத் குணரத்தினவும், விஜயஞ் செய்வார் என்றும் தெரியவருகிறது.

கோப்பாய் சுகாதாரவிழா சபையினர் கடந்த ஆண்டில் நடைபெற்ற சுகாதார விழாப் போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்று "மைகல் குணரத்ன" வெற்றிக்கேடயத்தை கவிசித்தகை முன்னிட்டு வழங்கவிருக்கும் பரிசளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காகவே, சுகாதார மந்திரி யாழ்ப்பாணம் வருகிறார்.

சுகாதார விழா சபையினரின் வேண்டுகோளை மந்திரி ஏற்று, யாழ்ப்பாணம் இம்மாத இறுதியில் விஜயம் செய்ய சம்மதித்துள்ளார் என்றும் தெரியவருகிறது.

சுகாதார மந்திரியும், சுகாதாரசேவை மந்திரியையும், இங்குள்ள ஆஸ்பத்திரிகள் சிலவற்றிற்குசென்று, நிலைமைகளை நேரில்கண்டு, அறிந்துகொள்வார்களென்றும் அறியப்படுகிறது.

## பிரிவுபசாரம்

பருத்தித்துறை, வியா

வடமராட்சித் தமிழாசிரியர் சங்கத் தனாதிகாரியும் ஞானசாரியர் கல்லூரி ஆசிரியருமான திரு ஆ. கதிர்காமத்தம்பி பதவி உயர்வு பெற்று வவனியாவைச்சேர்ந்த தாண்டிக்குளம் இராமகிருஷ்ணமிஷன் வித்தியாசாலைக்கு தலைமையாசிரியராகச் செல்வதை முன்னிட்டு சங்க நிர்வாகக் குழுவினர் பிரிவுபசார விருந்தளித்துக் கௌரவித்தனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.